DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -34

| | | |
|---|---|---|
| Name | : Dr. பானுமதி | Caste: |
| Husband Name: | திரு. ஸ்ரீதர் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 29th day of January -2024.

**A1 , A2, A5 to A7, A9, A13 to A18 present. A8, A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**29.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது கடலூர் மாவட்டம், விருதாசலம் அரசு மருத்துவமனையில் முதுநிலை அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.05.2008 அன்று அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மருத்துமனையில் அரசு உதவி மருத்துவராக பணிபுரிந்தேன். அன்றைய தினம் மாலை 4.20 மணிக்கு நான் மேற்படி மருத்துவமனையில் அலுவலலில் இருந்தபோது மீன்சுருட்டி காவல்நிலைய ஆய்வாளரிடமிருந்து கு.எண்.130/2008 இ.த.ச.பிரிவுகள் 147, 148, 341, 324, 326, 302, மற்றும் 120(பி) படியான வழக்கில் சம்மந்தப்பட்ட தர்மலிங்கம் (எ) சங்கர், த.பெ.காசிநாதன் என்ற சுமார் 35 வயது நிரம்பிய ஆண் பிரேதத்தின்மீது சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதமானது மேற்படி காவல்நிலைய த.கா.1013 திரு. முருகேசன் என்பவர் மூலமாக பெறப்பட்டது.

அந்த விண்ணப்பத்தின் பேரில் சடலசூராய்வினை அன்றைய தினம் 5.30 மணிக்கு ஆரம்பித்தேன். பிரேதத்தை மேற்படி த.கா. முருகேசன் என்பவர் அடையாளம் காண்பித்தார். பிரேதத்தின் வயிற்றில் இடது புறத்தில் ஒரு புள்ளி மச்சமும், இடது விலா பகுதியில் ஒரு புள்ளி மச்சமும், இடது முழங்கால் முட்டியில் ஒரு காயத்தழும்பும் காணப்பட்டது.

பிரேதத்தின் தலை துண்டிக்கப்பட்டிருந்தது. பிணவிரைப்பு தன்மையானது பிரேத்தின் இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலையில் கழுத்து எலும்பு, தசைகள், ரத்தநாளங்கள், நரம்புகள் ஆகியவை தெரிந்த நிலையில் காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலையில் கண்கள் மூடிய நிலையிலும், காது, மூக்கு மற்றும் வாய் ஆகியவற்றின் வழியாக ரத்தம் வழிந்தநிலையிலும் காணப்பட்டது.

பிரேதத்தின் உடல்பகுதியில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. வலது தோள்பட்டையின் கீழே ஒரு குத்துகாயமானது 4x2 cmx மார்புகூட்டின் உள்ளே செல்லும் அளவிலான ஆழத்துடன் காணப்பட்டது.

2. இடது கை பகுதியில் கிழிந்த காயம் 10x2 cm அளவில் உள்ளே இருக்கும் எலும்பு தெரியும் வரையிலான ஆழத்துடன் காணப்பட்டது.

3. இடது கை பகுதியில் மற்றொரு கிழிந்த காயம் 7x4 cm அளவில் உள்ளே இருக்கும் எலும்பு தெரியும் வரையிலான ஆழத்துடன் காணப்பட்டது. அந்த காயத்தில் இடது தோள்பட்டை எலும்பில் முறிவு காணப்பட்டது.

4 .இடது கையின் உள்பகுதியில் 5x3 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட கிழிந்த காயம் காணப்பட்டது.

5. வயிற்று பகுதியில் ஒரு குத்து காயம் காணப்பட்டது. அந்த காயத்தின் வழியாக குடல் வெளியே வந்திருந்தது.

**<u>உட்புறசூராய்வு</u>**

**<u>மார்பு பகுதி –</u>** விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை. இருதயத்தின் அனைத்து அறைகளும் காலியாக காணப்பட்டது. இரண்டு பக்க

நுரையீரல்களும் ரத்தம் செரிந்த நிலையில் காணப்பட்டது.

**வயிற்று பகுதி–** இரைப்பையில் 100 கிராம் அளவுள்ள செரித்த உணவு காணப்பட்டது. அதில் குறிப்பிடதகுந்த எந்த வாடையும் இல்லை. மண்ணீரல், கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை ரத்தம் செரிந்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

**கபாலம்–** கபாலத்தில் எந்த எலும்பு முறிவும் காணப்படவில்லை. மூளை ரத்தம் செரிந்து காணப்பட்டது.

வயிற்று பகுதியிலிருந்த 5 வது வெளிபுற காயத்தின் வழியாக வெளியே வந்திருந்த குடலானது கிழிந்த நிலையில் காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை 6.20 மணிக்கு பிண கூராய்வு நிறைவு செய்யப்பட்டது. இறந்த நபர் பிணகூராய்வு செய்யப்படுவதற்கு 6 முதல் 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்க கூடும்.

இறந்த நபர் அவரது தலை துண்டிக்கப்பட்டதனாலும், அவரது உடலின் முக்கிய அவையங்கள் அனைத்தும் பழுந்தடைந்த காரணத்தினாலும், அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் ரத்தபோக்கின் காரணத்தினாலும் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.36.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள் மற்றும் வீச்சருவாள் போன்றவற்றால் ஒரு நபர் தாக்கப்படும்போது நான் மேலே சொன்ன வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கும், தலை துண்டிக்கப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

அன்றைய தினமே மேற்படி காவல்நிலைய ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேற்படி கு.எண். சம்மந்தப்பட்ட வழக்கில் இறந்துபோன மற்றொரு நபரான பிரபு த.பெ.பாரிவள்ளல் என்ற சுமார் 24 வயது நிரம்பிய ஆண் பிரேதத்தின்மீது சடலக்கூராய்வு செய்து அறிக்கை வழங்கக்கோரி வேண்டுகோள் கடிதமானது மேற்படி காவல்நிலைய த.கா.671 திரு. முருகன் என்பவர் மூலமாக மாலை 4.30 மணிக்கு பெறப்பட்டது.

அந்த விண்ணபத்தின் பேரில் சடலகூராய்வினை அன்றைய தினம் 5.30 மணிக்கு ஆரம்பித்தேன். பிரேதத்தை மேற்படி த.கா. முருகன் என்பவர் அடையாளம் காண்பித்தார். பிரேதத்தின் இடது முழுங்கையில் ஒரு காயத்தழும்பும், வலது புஜத்தில் ஒரு மச்சமும், இடது தொடையில் ஒரு மச்சமும் காணப்பட்டது.

பிரேதத்தின் தலை துண்டிக்கப்பட்டிருந்தது. பிணவிரைப்பு தன்மையானது பிரேத்தின் இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலையில் கண்கள் மூடிய நிலையில் காணப்பட்டது. வாய், மூக்கு, காதுகள் ஆகிவற்றின் வழியே ரத்தம் வழிந்தநிலையில் காணப்பட்டது. துண்டிக்கப்பட்ட தலையின் வழியே கழுத்து எலும்பு, தசைகள், ரத்தநாளங்கள், நரம்புகள் ஆகியவை தெரிந்த நிலையில் காணப்பட்டது.

பிரேதத்தின் உடல்பகுதியில் கீழ்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. வலது முழங்காலின் உள்பகுதியில் ஒரு கிழிந்த காயமானது 10x4 cmx எலும்பு ஆழத்திற்கு காணப்பட்டது.

2. வலது காலில் ஒரு கிழிந்த காயம் 8x3x2 cm அளவில் காணப்பட்டது.

3. மார்பு கூட்டுபகுதியில் ஒரு குத்துகாயமானது 4x2 cm அளவில் நெஞ்சுகூட்டின் உள்ளே செல்லும் அளவிற்கு காணப்பட்டது.

4 .இடதுபுற காலின் தொடையின் மேல்பகுதியில் 3x2 cmx எலும்பு வரை ஆழம் கொண்ட கிழிந்த காயம் காணப்பட்டது.

5. இடது முழங்கையில் ஒரு கிழிந்த காயமானது 10x4x5 cm அளவில் காணப்பட்டது. அந்த காயமானது இடது முழங்கையின் முட்டி எலும்பு தெரியும் வகையில் காணப்பட்டது.

<u>**உட்புறகூராய்வு**</u>

<u>**மார்பு பகுதி –**</u> விலா எலும்புகளில் முறிவு எதுவும் காணப்படவில்லை. இருதயத்தின் அனைத்து அறைகளும் காலியாக காணப்பட்டது. இரண்டு பக்க நுரையீரல்களும் ரத்தம் செரிந்த நிலையில் காணப்பட்டது.

**வயிற்று பகுதி–** இரைப்பையில் 100 கிராம் அளவுள்ள செரித்த உணவு திரவ

நிலையில் காணப்பட்டது. அதில் குறிப்பிடதகுந்த எந்த வாடையும் இல்லை. கல்லீரலில் ஒரு வெட்டு காயமானது 5x1x3 cm அளவில் காணப்பட்டது. மண்ணீரல், மற்றும் சிறுநீரகங்கள் ஆகியவை ரத்தம் செரிந்து காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது.

**கபாலம்–** கபாலத்தில் இடதுபுற மண்டையோட்டிலும் மற்றும் பின்புறத்திலும் எலும்பு முறிவு காணப்பட்டது. மூளை ரத்தம் செரிந்த நிலையிலும், ரத்தம் உறைந்த நிலையிலும் காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு பிண கூராய்வு நிறைவு செய்யப்பட்டது. இறந்த நபர் பிணகூராய்வு செய்யப்படுவதற்கு 6 முதல் 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்க கூடும்.

இறந்த நபர் அவரது தலை துண்டிக்கப்பட்டதனாலும், அவரது உடலின் முக்கிய அவையங்கள் காயப்படுத்தப்பட்டதானால் ஏற்பட்ட ரத்தபோக்கு மற்றும் அதிர்ச்சியின் காரணமாகவும் இறந்திருக்கலாம் என்று கருத்து தெரிவித்து நான் பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன். என்னால் வழங்கப்பட்ட பிரேதபரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.37.

என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பட்டாகத்திகள் மற்றும் வீச்சருவாள் போன்றவற்றால் ஒரு நபர் தாக்கப்படும்போது நான் மேலே சொன்ன வெளிப்புற காயங்கள் ஏற்படுவதற்கும், தலை துண்டிக்கப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

காரைஎலும்பு, தோள்பட்டை எலும்பு, கழுத்துபட்டை எலும்பு ஆகிய அனைத்தும் ஒன்றுதான். ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்கண்ட இரண்டு பிரேதங்களும் அருகருகே வைத்துதான் பிணகூராய்வு செய்யப்பட்டது. ஒரு உடல்சம்மந்தமாக குறிப்புகள் எடுத்துவிட்டு பின்னர் அடுத்த உடல்சம்மந்தமாக குறிப்புகள் எடுத்தேன்.

**<u>1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஆய்வாளர் என்னை பிணகூராய்வு செய்த தினத்தன்றே விசாரித்தார். அதன்பின்னிட்டு விசாரித்தாரா என்று எனக்கு நினைவில்லை. மேற்கண்ட இரண்டு பிரேதங்களிலிருந்தும் நான் உடல் உள்ளுறுப்புகளை சேகரம் செய்து ரசாயன

பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. அதற்காக விண்ணப்பம் கொடுக்கப்படவில்லை என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். என்ன விதமான ஆயுதங்களால் தாக்கப்பட்டால் மேற்கண்ட காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆயுதங்களால் மேற்படி காயங்கள் ஏற்படுத்தலாம் என்று நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி நினைவில்லை.

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்று எனக்கு நினைவில்லை. எத்தனை ஆய்வாளர்கள் என்னை விசாரித்தார்கள் என்றும் எனக்கு நினைவில்லை. பொதுவாக ஒரு மருத்துவர் பிரேத பரிசோதனை மேற்கொள்ளும் போது ஒரு பிரேதத்தை முழுவதுமாக பரிசோதனை செய்து முடித்ததிற்கு பிறகு தான் மற்றொரு பிரேதத்தை பரிசோதனை செய்யவேண்டும் என்றால் சரிதான்.

இந்த வழக்கிலும் நான் ஒரு பிரேதத்தின் மீதான பரிசோதனையை முடித்ததிற்கு பிறகு தான் மற்றொரு பிரேதத்தை பரிசோதனை செய்தேன் என்றால் சரிதான். என்ன விதமான ஆயுதங்களால் மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டிருக்க கூடும் என்று நான் பிரேதபரிசோதனை அறிக்கைகளில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு பிரேதங்களின் வெட்டப்பட்ட தலைகளையும் உடல்களுடன் பொறுத்திபார்த்து அதன் பின்னிட்டு தான் பிரேத பரிசோதனை செய்ததாக எனது அறிக்கைகளில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

இறந்துபோன பிரபு என்பவரது பிரேதபரிசோதனை அறிக்கையில் injury over the Decapitated body coincides with the injury over the head at the neck region என்று குறிப்பிட்டிருக்கிறேன். அந்த சங்கதியை தர்மலிங்கத்தின் அறிக்கையில் குறிப்பிட தவறியிருக்கிறேன்.

மேற்கண்டவாறு பிரபு என்பவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் injury over the Decapitated body coincides with the injury over the head at the neck region என்று என்னால் குறிப்பிடப்பட்டிருக்கும் சங்கதியானது தவறு என்றால் சரியல்ல. நான் முறையான

மருத்துவ சட்டயியலை பின்பற்றி மேற்கண்ட இரண்டு பிரேதங்களையும் பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட இரண்டு பிரேதங்களையும் மேற்கண்ட இரண்டு பிரேதபரிசோதனை அறிக்கைகளில் சொல்லப்பட்டுள்ள நேரத்தில் பிரேதபரிசோதனை மேற்கொள்ளவில்லை என்றாலும், அப்படி மேற்கொண்டிருந்தால் ஒவ்வொரு பிரேதத்தை பொறுத்தும் வெவ்வேறான நேரங்கள் பிரேத பரிசோதனை நேரங்களாக குறிப்பிடப்பட்டிருக்கும் என்றாலும், அவ்வாறு குறிப்பிடாத சங்கதியானது நான் முறையான பிரேதபரிசோதனை மேற்கொள்ளவில்லை என்பதை காட்டுகிறது என்றாலும் சரியல்ல.

நான் மேற்படி இரண்டு உடல்களுடன் தலைகளை பொறுத்தி பார்த்து உறுதி செய்துகொண்டதற்கு பிறகு பிரேதபரிசோதனை மேற்கொள்ளவில்லை என்றாலும், போலிசார் உடல்களுடன் தலைகளை பொறுத்தி கொடுத்ததை அடிப்படையாக கொண்டு அவர்கள் கேட்டுகொண்டதன் அடிப்படையில் தவறான அறிக்கைகள் வழங்கியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**8– ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்துபோன தர்மலிங்கத்தின் உடலில் இரண்டு கால்கள் மற்றும் கைகளிலும் பிரேத விரைப்பு தன்மை காணப்பட்டது. எனவே தர்மலிங்கம் பிரேத பரிசோதனை அரம்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து 12 மணி நேரங்களுக்கு முன்பாக இறந்திருக்ககூடும் என்றால் சரியல்ல. 6 முதல் 12 மணி நேரங்களுக்குள்ளாக இறந்திருக்கலாம். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட ஆயுதங்களால் தர்மலிங்கத்தின் உடலில் காணப்பட்ட காயங்கள் ஏற்படுவதற்கு வாய்புஇல்லை என்றால் சரியல்ல. ஒழுங்கற்ற தன்மை கொண்ட ஆயுதங்களால் தாக்கப்படும் சமயத்தில் தான் கிழிந்த காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என்றால் சரியல்ல. எனது அறிக்கைகளில் காயங்களின் தன்மை குறித்து நான் சரியாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

**3 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பிணவிரைப்பு தன்மையை அடிப்படையாக கொண்டு தான் இறந்துபோன நபர் எப்போது இறந்திருக்கலாம் என்பது குறித்து கருத்து தெரிவித்திருக்கிறேன்.

பிணவிரைப்பு தன்மை எப்போது ஏற்பட ஆரம்பிக்கும் என்றால் அது சுற்றுப்புற சூழ்நிலை மற்றும் வெப்பநிலையை பொறுத்தது.

**6 ஆம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**13 ஆம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.